**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.41/2026 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw-2 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : திரு.வைரமுத்து (சிறப்பு சார்பு ஆய்வாளர்)

Father's Name :

Village :

Taluk :

Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

14.07.2026

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்பொழுது ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.உதயக்குமார், மற்றும் இவ்வழக்கினை விசாரணை செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.ராஜா என்பவர்களை தெரியும். அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு தெரியும், ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியளிக்கிறேன்.

2) கடந்த 25.04.2026ம் தேதி 08.00 மணிக்கு ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.உதயக்குமார் நிலையப்பொறுப்பில் இருந்த போது கிருஷ்ணாபுரம் ராஜகோபால் மகன் கெங்காதரன் என்பவர் காயம்பட்டு மதுரை மீனாட்சி மிஷன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கிடைத்த தகவலினை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்து கெங்காதரன் என்பவரை

விசாரிக்க அவர் நடந்த சம்பவத்திற்கு குடும்பத்தாரிடம் கலந்தாலோசித்து புகார் கொடுப்பதாக கூறிய நபரை மீண்டும் 26.04.2026 ம் தேதி விசாரணைக்கு சென்றபோது காலை 10.00 மணிக்கு கெங்காதரன் அளித்த மனுவை பெற்று நிலையம் வந்து புகார் மனுவின் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண்.89/2026, பிரிவுகள்– 296(பி), 115(2), 118(1) of BNS ஆக வழக்கு பதிவு செய்தார். **புகார் மனு அ.சா.ஆ. 2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** பின்பு இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் ராஜா 26.04.2026 ம் தேதி 18.00 மணிக்கு சாட்சிகள் முத்துப்பாண்டி, ஆறுமுகம் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.**

**4)** பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் கெங்காதரன், ராஜகோபால், அமுதா, சுமத்திரவள்ளி, முத்துப்பாண்டி, ஆறுமுகம் மற்றும் இவ்வழக்கினை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் உதயக்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 சிகிச்சை அளித்த மதுரை மீனாட்சி மிஷன் தனியார் மருத்துவமனை மருத்துவர் திரு.சுரேஷ்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டினை பெற்றுள்ளார். **அ.சா.1 ன் விபத்து பதிவேடானது அ.சா.ஆ.6 ஆகவும், அ.சா.1 ன் காயச்சான்றானது அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

5) பின்னர் அவரது விசாரணையில் சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி அய்யலுச்சாமி 09.05.2026 ம் தேதி 11.00 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் நிலையப்பிணையில் விடுவித்துள்ளார். இவ்வழக்கின் மருத்துவர் வழங்கிய காயச்சான்றில் காயத்தின் தன்மை அ.சா.1 க்கு கொடுங்காயம் என்று குறிப்பிடப்பட்டதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவு சட்டப்பிரிவுகளான –296(பி), 115(2), 118(1) of BNS லிருந்து 296(பி), 115(2), 118(2) of BNS மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையுடன் குற்ற இறுதி அறிக்கையை

கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகார் வாக்குமூலமானது சொன்ன நாள், நேரத்தில் வைத்து பெறப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை வழக்கிற்காக பொய்யாக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி சொன்ன நாள் நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.